மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதிக 'வெயிட்' இருப்பதாலே பஞ்சர் ஆகாது என்று நினைக்கிறேன். டயர், ட்யூப்கள் ஒவ்வொரு கம்பெனியிலும் தயாரிக்கப்படுகின்றன. சில டயர், ட்யூப்களுக்கு நல்ல மதிப்பு இருக்கிறது. சில டயர், ட்யூப்களை தரம் குறைந்ததாக மக்கள் கருதினால் நாம் அதை பரிசீலிக்கலாம்.

திரு. க. கோமதி சங்கரதீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, மிதி வண்டிகளை ஏழை மக்கள் மிகவும் உபயோகப்படுத்துவதனால் அவைகளுக்கு டயர், ட்யூப்கள் கிடைக்காமல், அவர்கள் கஷ்டப்படுவதனால் அவர்களுக்கு கிடைப்பதற்கு, இந்த நெருக்கடியை நீக்குவதற்கு அரசாங்கம் உடனடியாக என்ன நடவடிக்கை எடுக்கும் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட ஒரு நிலை ஏற்பட்டிருப்பதாக நான் ஒப்புக்கொள்ளவில்லை.

திரு. ஏ. எம். இ. ராஜா : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது டன்லப் கம்பெனி தயார் செய்கின்ற டயர், ட்யூப்களுக்கு கிராக்கி அதிகம் இருக்கிறது என்று கூறினார்கள். அதேபோல் மற்ற டயர், ட்யூப்களைத் தயாரிப்பவர்களும் இந்த டன்லப் கம்பெனி எந்த அளவுக்கு தயார் செய்கிறார்களோ, அந்த அளவுக்குத் தயார் செய்ய வேண்டுமென்று அரசு அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாம் எதும் நடவடிக்கை எடுக்க முடியாது. அவர்களாகவே வியாபாரப் போட்டியில் அப்படிப்பட்ட முறைகளை எல்லாம் கடைப்பிடிப்பார்கள்.

Export of tiles

*423—*Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) whether a large quantity of tiles manufactured in this State are being exported to the Far Eastern countries ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை. சென்னையிலுள்ள ஓடுகள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றுமட்டுமே ஓடுகளைச் சொற்ப அளவுகளில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து வந்தது.

(இ) ரூ. 41,747·50 மொத்த மதிப்புள்ள 1,64,500 மேல் ஓடுகளும், 3,950 மோட்டு ஓடுகளும் 1967-68-ம் ஆண்டில் சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஓடு, செங்கல் சூளைகளுக்கு முன்பெல்லாம் 5,000, 10,000 என்கின்ற அளவில் கடன் வசதி இருந்தது. இப்பொழுது இருக்கிற முறைப்படி ஒரு இலட்சத்திற்குக் குறைவாக இப்படிப்பட்ட ஓடு, செங்கல் சூளைகளுக்குக் கடன் கொடுக்காததனாலே, தொகையைக் குறைத்துக் கொடுக்க அரசு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தகவல் இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த ஓடுகளுடைய விலை முன்பு ரூ. 23 ஆக இருந்தது. இப்பொழுது ரூ. 33-க்கு விற்கிறது. பற்றுக்குறை காரணமாக அதன் விலை ஏறி இருக்கிறது என்று நினைக்கிறேன். ஆகவே, இதை ஏற்றுமதி செய்யாமல் இருக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்றுமதி குறைந்த அளவுக்குத்தான் இருக்கிறது. அதனால் எந்தவிதமான பாதகமும் ஏற்படாது.